செய்தி வெளியீடு எண்: 818 நாள்: 30.9.2008

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன் அவர்கள் இன்று (30.09.2008) காலை தலைமைச் செயலகத்தில் ஆவின் இணையம், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு கூட்டுறவு சட்டத்தின்படி சிறப்பு துணை விதிகள் ஏற்படுத்துவது சம்மதமாக அரசால் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவுடன் கலந்தாய்வு நடத்தினார். இது சம்மந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது இணைய ஊழியர்களின் நலனுக்காக சிறப்பு துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் நீண்டகாலமாக நிறுத்திவைக்கப்பட்ட பணி உயர்வு தற்போது ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களின் நலனை கருத்தில்கொண்டு சிறப்பு துணை விதிகள் ஏற்படுத்த உயர்மட்டக்குழு பணிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் இந்த உயர்மட்டக்குழுவின் பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டு, உயர்மட்டக்குழுவிடம் பணிகளை விரைந்து முடிக்க கேட்டுக்கொண்டார். இந்த ஆய்வின்போது கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு அபூர்வ வர்மா, இ.ஆ.ப., பால்வளத்துறை மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9